DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.374/2022**

Continuation of Cross Examination of Witness

03.11.2022

**அ.சா. 1- குருசாமி**

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1) போலீசார் விசாரணையில் 08.01.2004 ம் தேதி 8.15 மணிக்கு மேற்படி குருசாமி இறந்ததாக குறிப்பிட்ட விட்டு, முதல் விசாரணையில் 10.15 மணிக்கு இறந்துவிட்டதாக நான் சாட்சியம் அளித்துள்ள சூழ்நிலையில் அவ்வாறு அவர் இறந்தபோது, நான் மேற்படி இடத்தில் இல்லை என்பதால் தான் மாறுபட்ட சாட்சியம் அளித்துள்ளேன் என்றால், சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள, முதலமைச்சருக்கு என்னால் அனுப்பப்பட்டதாக கூறப்படும் மனுவில், மேற்படி குருசாமி எத்தனை மணிக்கு இறந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால், அது குறித்து ஞாபகம் இல்லை. ஈமக்காரியங்கள் செய்யப்பட்டதாக கூறப்பட்ட இடத்தில் ஓடையோ அல்லது ஆறோ இருக்கிறதா என்றால், இருக்கிறது. அது ஓடை ஆகும்.

2) எனக்கு எதிராக வழங்கப்பட்ட அசல் வழக்கு எண்.21/2006 வழக்கின் தீர்ப்புரையில் நான் நம்பத்தகுந்த நபர் அல்ல என வழங்கப்பட்டுள்ளது என்றால், எனக்கு அது குறித்து ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படுவது அசல் வழக்கு எண்.21/2006 வழக்கில் நான் வழங்கிய சாட்சியத்தின் சான்றிட்ட நகல் ஆகும். அது எ.சா.ஆ.3 ஆகும். மேற்படி ஆவணத்தில் வாகனப்பதிவு சான்று என்னுடையது என்று நான் ஒப்புக் கொண்டுள்ளேன் என்றால், அது குறித்து எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி சாட்சியத்தின் போது TN 30 Y 7830 என்ற யமஹா வாகனம் என்னுடையது என்று ஒப்புக் கொண்டுள்ளேன் என்றால், தற்போது ஞாபகம் இல்லை. மேற்படி ஆவணங்களை ஏற்கனவே ஒப்புக் கொண்டுவிட்டு சத்தியப்பிரமாணத்தின் அடிப்படையில் பொய்

சாட்சியம் சொல்லுவது எனது வழக்கம் என்றால், சரியல்ல. என்னுடைய தகப்பனார் என்று சொல்லப்படக்கூடிய குருசாமி என்பவருக்கு நான்தான் மகன் என்று சொல்லக்கூடிய ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன்.

3) இந்த வழக்கில் நான் மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால், எனக்கு ஞாபகம் இல்லை. அசல் வழக்கு எண்.625/2004 வழக்கிலும் மேற்படி குருசாமி என்பவருக்கு நான்தான் மகன் என்பதைக் காட்டும் ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள அ.சா.ஆ.2 ல் நான்தான் குருசாமியின் மகன் என்பதைக் காட்டும் எந்த ஆவணத்தைக் குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால், பொதுப்பாக பாகப்பத்திய விடுதலைப் பத்திரம், ஜீவனாம்ச பத்திரம் மற்றும் விவகாரத்து பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேன். எந்த நீதிமன்றத்தில் மேற்படி விவகாரத்து கொடுக்கப்பட்டது என்றால், கோர்ட்டில் கொடுக்கப்படவில்லை, கட்டப்பஞ்சாயத்து மூலமாக எழுதி வாங்கப்பட்டது. அதன் பிறகு எனது தாயாருக்கு வேறு திருமணம் நடந்ததா என்றால், இல்லை. சுசீலா என்பவர் என் மீது தாக்கல் செய்த தனிப்புகாரின்அடிப்படையில் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.373/2022 என்ற வழக்கில் எனக்கு எதிராகவும், மற்ற எதிரிகளுக்கு எதிராகவும் பிடியாணை வழங்கப்பட்டு, அது 31.10.2022 ம் தேதி ரத்து செய்யப்பட்டது என்றால், சரிதான்.

4) எனது தாயார் மேற்படி பிடியாணை ரத்து செய்த போது, அவருடைய ஆதார் அடையாள அட்டையின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, அவரது வழக்கறிஞருக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டு, ஆதார் அடையாள அட்டையின் நகலும் கொடுக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி ஆதார் அடையாள அட்டையில் எனது தாயாரின் கணவர் பெயர் குருசாமி என்று குறிப்பிடப்படவில்லை என்பதாலும், சின்னத்தம்பி என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதால், மேற்படி 3 ஆவணங்களும் எங்களால் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. எந்த சூழ்நிலையிலும், எனது தாயாருக்கும், இறந்துபோனதாக குறிபிடப்படும் குருசாமிக்கும் தொடர்பே இருந்ததில்லை என்றாலும், அந்த தொடர்பின் அடிப்படையில் நான் பிறக்கவில்லை என்றாலும், சரியல்ல.

5) என்னுடைய பள்ளி மாற்று சான்றிதழை சமர்ப்பிக்க சொல்லி மனு கொடுத்தும், மேற்படி சான்றை சமர்ப்பித்தால் எனது தந்தை பெயர் சின்னத்தம்பி என்பது தெரிந்துவிடும் என்பதால், வேண்டும் என்றே நான் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. எனது ஆதார் அட்டையை நீதிமன்றத்தில் இதுவரை கொடுக்கவில்லை என்றாலும், அவ்வாறு கொடுத்தால் நான் சின்னத்தம்பியின் மகன் என்பது தெரிந்து விடும் என்பதால் தான் கொடுக்கவில்லை என்றால், சரியல்ல, எனது இன்சியலை மாற்றுவதற்காக தலைமையகத்திற்கு அனுப்பியுள்ளேன். மேற்படி ஆதார் அட்டையில் எனது பெயர் குருசாமி, S/o.குருசாமி என குறிப்பிடப்பட்டுள்ளது. நான் ஆதார் அடையாள அட்டையில் திருத்தங்கள் செய்ய வேண்டும் என்றால், இணைய வழியில் தான் செய்ய வேண்டும் என்றாலும், நான் கூறுவதுபோல் தலைமையகத்தில் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றாலும், நான் அதை தாக்கல் செய்தால் சின்னத்தம்பியின் மகன் என்பது தெரிந்துவிடும் என்றால், சரியல்ல.

6) எனது ஆதார் அட்டையில் குருசாமி, த/பெ.சின்னத்தம்பி என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், குருசாமி, த/பொ.குருசாமி எனக் குறிப்பிடப்படவில்லை என்றால், சரியல்ல. எனது ஆதார் அட்டையின் 10 எண்கள் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. எனது ஆதார் அடையாள அட்டையின் எண்.5272 6232 6188 என்று சொன்னால் அது குறித்து எனக்குத் தெரியாது. ஆதார் அட்டையில் உள்ள விவரங்களில் திருத்தங்கள் செய்தாலும், ஆதார் எண் மாறாது என்பதால் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யக்கூடாது என்பதற்காக மேற்படி எண்ணை மறுக்கிறேன் என்றால், சரியல்ல. மேற்படி ஆதார் அட்டையை நான் கூட்டுறவு சங்கத்தில் கடன் பெறும்போது ஒப்படைத்துள்ளேன் என்றாலும்,அதில் எனது அப்பா பெயர் சின்னத்தம்பி எனக் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் குருசாமி என்று குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல. மேற்படி Memorandum of Deposit of Title Deeds யை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யச் சொல்லி அறிவிப்பு கொடுத்தும், அதை தாக்கல் செய்தால் எனது நம்பகத்தன்மையின்மை வெளிப்பட்டு விடும் என்பதால் தான், நான் வேண்டுமென்றே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல.

7) மேற்படி ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ள நிரந்தர பிரமாண கணக்கு எண் ஆவணங்களில் எனது அப்பா பெயர் சின்னத்தம்பி என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், குருசாமி என்று குறிப்பிடப்படவில்லை என்பதால்தான் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. எனக்கு கனரா வங்கி கோணேரிப்பட்டி கிளையில் ஒரு சேமிப்புக் கணக்கு உள்ளது என்றால், இல்லை. அதனுடைய எண்.1771101003877 என்றால், அது என்னுடையது அல்ல. மேற்படி ஆவணங்களிலும் எனது அப்பா பெயர் சின்னத்தம்பி என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் தான், வேண்டும் என்றே அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. நான் மேற்படி அசல் வழக்கில் குருசாமி என்பவரது மகன் நான் என்பதைக் காட்ட ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யாமல், பொய்யான தகவலின் அடிப்படையில் ஒரு புகாரை தாக்கல் செய்து இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்றால், சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள அ.சா.ஆ.4 ல் மற்றும் புகார் மற்றும் அனைத்து ஆவணங்களிலும் மேற்படி உயிலின் பதிவு எண்.3/2004 என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரிதான்.

8) போலீசார் விசாரணையின்போது மேற்படி பதிவு எண்.3/2004 எனக் குறிப்பிட்ட ஆவணத்தை நான் ஒப்படைக்கவில்லை என்றால், எனக்கு ஞாபகம் இல்லை. போலீசாரிடம் 3/2004 என்ற ஆவண எண்ணை மட்டும் குறிப்பிட்டுவிட்டு, ஆவணத்தைக் கொடுத்ததாக வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால், எனக்கு ஞாபகம் இல்லை. போலீசார் என்னிடம் என்னென்ன ஆவணங்களைக் கொடுத்தேன் என்று நீதிமன்ற விசாரணையிலோ அல்லது போலீசார் வாக்குமூலத்திலோ நான் சொல்லவில்லை என்றால், எனக்கு ஞாபகம் இல்லை. போலீசார் விசாரணையின்போது நான் எந்த ஆவணத்தையும் கொடுத்தாக குறிப்பிடாததால் தான், நான் ஞாபகம் இல்லை என மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. எனவேதான் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையில் ஆவண எண்.01/2004 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், அதற்கும் இந்த வழக்கிற்கும் தொடர்பு இல்லை என்றால், சரியல்ல. 01/2004 மற்றும் 03/2004 ஆவணங்களுக்கு தொடர்பு இல்லை என்றால், ஞாபகம் இல்லை.

9) புகாரில் 03/2004 என ஒப்புக் கொண்டு விட்டு தற்போது ஞாபகம் இல்லை என்று தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. மேற்படி குருசாமிக்கு நான்தான் வாரிசு என்று கூறியிருந்தாலும், மேற்படி குருசாமிக்கு வழக்கு சம்பந்தப்பட்ட சொத்துக்கள் எப்படி வந்தது என்பது குறித்து தெரியாது, மேற்படி சங்கதி தவறு என்பதால் தான் என்னால் நீதிமன்ற விசாரணையிலோ அல்லது போலீசார் விசாரணையிலோ சொல்ல முடியவில்லை என்றால், சரியல்ல. எனது புகாரில் நான் குறிப்பிட்டுள்ள பாகப்பிரிவினை பத்திரம் மேற்படி குருசாமிக்கு எப்படி பாத்தியப்பட்டது என்பது குறித்து, எனக்கோ எனது தாயாருக்கோ தெரியாது என்றால், வாரிசு அடிப்படையில் பாத்தியப்பட்டது. மேற்படி சொத்து எனது அப்பா என்று சொல்லப்படக்கூடிய குருசாமி என்பவருக்கு எதனடிப்படையில் பாத்தியப்பட்டது என்று எனக்குத் சொல்லத் தெரியாது என்றால், அப்போது நான் பிறக்காததால் எனக்கு அது பற்றித் தெரியாது. அசல் வழக்கு எண்ணில் மேற்படி ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள அனைத்து சொத்துக்கள் குறித்து பரிகாரம் எதுவும் கோரவில்லை என்றால், வேறு சொத்து எதுவும் இல்லை.

10) குருசாமி என்பவருக்கு கிடைத்த பிற ஜங்கம சொத்துகளின் பேரில், மேற்படி ஆவணத்தின் அடிப்படையில், பரிகாரத்தின் மூலம், அசல் வழக்கு எண்ணில் கோரவில்லை என்றால், சரியல்ல, பரிகாரம் கேட்டுள்ளேன். மேற்படி ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள பாகக்கராரில் உள்ள சொத்துக்களில் மட்டும் பரிகாரம் கோரியுள்ளேன் என்றாலும், வேறு சொத்துக்களை குறித்து மேற்படி வழக்கில் பரிகாரம் கோரவில்லை என்றாலும், சரியல்ல. எனக்கு குருசாமி என்பவர் யார் என்றே தெரியாது என்றாலும், மேற்படி நிலத்திற்கு அருகாமையில் உள்ள பிற நில உரிமையாளர்களின் தூண்டுதலின் பேரில், மேற்படி வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. மேற்படி சொத்தை தற்போது யார் அனுபவம் செய்துவருகிறார் என்றால், மாரிமுத்து என்பவரிடம் நான் ஒப்படைத்துள்ளேன். அவ்வாறு நிலத்தை மாரிமுத்து என்பவரிடம் ஒப்படைத்த சங்கதியை போலீசார் விசாரணையிலோ அல்லது நீதிமன்ற விசாரணையிலோ சொல்லவில்லை என்றால், சரிதான். நான் அசல் வழக்கை தாக்கல் செய்தபோது மேற்படி நிலத்தின் அனுபவம் என்னிடம் உள்ளதாகத்தான் குறிப்பிட்டு வழக்கை தாக்கல் செய்தேன் என்றால், சரிதான்.

11) மேற்படி நிலத்தை யார் மேம்படுத்தி விளை நிலமாக மாற்றினார் என்றால், மாரிமுத்து மாற்றினார். மேற்படி குருசாமி மேற்படி நிலத்தை விளை நிலமாக மாற்றாமல் தரிசாக போட்டு வைத்திருந்தாரா என்றால், அப்போதே விளைநிலமாகத்தான் இருந்தது. எனது அப்பாவிற்கு மேற்படி நிலம் ஒதுககப்படும்போது அது தரிசாக இருந்ததா அல்லது விளை நிலமாக இருந்ததா என்றால், விளை நிலமாகத்தான் இருந்தது. நான் தாக்கல் செய்த ஆவணங்களின் அடிப்படையில் தரிசாகத்தான் இருந்தது என்றாலும், விளைநிலமாக இருந்ததாக குறிப்பிடப்படவில்லை என்றால், அது குறித்து எனக்கு ஞாபகம் இல்லை. 1965 லிருந்து 1980 வரையில் சிறுகச் சிறுக மேற்படி நிலம் விளைநிலமாக மாற்றப்பட்டிருந்தது என்றாலும், நான் அப்போது பிறக்கவில்லை என்பதால் அது குறித்து எனக்கு தெரியவில்லை என்றால், அது குறித்து எனக்குத் தெரியாது. நான் 1974 க்குப் பிறகு பிறந்துள்ளதால், நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் எந்த விதத்திலும், நீதிமன்றத்திலோ அல்லது பிறரிடமோ நம்பத்தகுந்த நபர் அல்ல என்றால், சரியல்ல.

12) மற்றவர்களின் சொத்தை அபகரிக்கும் நோக்கத்துடன் அசல் வழக்கையும், இந்த வழக்கையும் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. அசல் வழக்கு எண்.21/2006 வழக்கில் மேற்படி நிலம் ஆறுமுகம் என்பவருக்கு உரிமையானது என தீர்ப்பு செய்யப்பட்டுள்ளது என்றால், அது குறித்து மாரிமுத்துவிற்குத்தான் தெரியும். மேற்படி வழக்கை நான்தான் நடத்தினேன் என்றாலும், மாரிமுத்து நடத்தவில்லை என்றாலும், நான் வேண்டும் என்றே பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. மேற்படி அசல் வழக்கில் நானும், எனது தாயாரும் கட்சிக்காரர்கள் என்றால், சரிதான். கட்சிக்காரர்கள் என்ற தகுதியின் அடிப்படையில்தான் மேற்படி வழக்கில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றாலும், தற்போது தெரியாது, சரியல்ல என்று தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. மேற்படி வழக்கின்படி வழக்கு சொத்து ஆறுமுகம் என்பருக்கு பாத்தியப்பட்டது என்று முடிவான நிலையில் நான் எப்படி உரிமை கொண்டாடுகிறேன் என்றால், அசல் வழக்கு எண்.625/2004 தீர்ப்பின் அடிப்படையில் உரிமை கொண்டாடுகிறேன். மேற்படி அசல் வழக்கு எண்.21/2006 வழக்கில் சொத்துக்கள் அனைத்தும் பற்றுகை செய்யப்பட்டு, மேற்படி பற்றுகை நிலுவையில் உள்ளது என்றால், அது குறித்து ஞாபகம் இல்லை.

(எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் கால அவகாசம் கோரியதால் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)